**சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்**
**சென்னை – 600 008**
**முழுமைத் திட்டப் பிரிவு**

**அறிவிக்கை எண். MPU/LPADS/ திருமழிசை /2024-7**
**படிவம் – அ**
**(விதி 3 (1)-ன் படி)**

**திருமழிசை நிலச் சேகரிப்புப் பகுதி அபிவிருத்தித் திட்டத்தின் நோக்கத்திற்கான அறிவிப்பு**

1. தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டம், 1971 (தமிழ்நாடு சட்டம் 35/1972), பிரிவு 39-A, உட்பிரிவு (1)-ல் வழங்கப்பட்ட அதிகாரத்தின்படி, திட்டமிடல் அமைப்பு இவ்வறிவிக்கையின் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பகுதியை **திருமழிசை நிலச் சேகரிப்புப் பகுதி அபிவிருத்தித் திட்டமாக அறிவிக்கும்** தனது நோக்கத்தை அறிவிக்கை எண். MPU/LPADS/ திருமழிசை /2024-7-ன் மூலம் சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவிக்கப்படுகிறது.

2. இந்த உத்தேசத் திட்டம் கீழ்க்கண்ட பரந்த நோக்கங்களைக் கொண்டது:
   (அ) முன்மொழியப்பட்ட புதிய நகர வளர்ச்சிப் பகுதியில் உள்ள சுற்றுவட்டார பகுதிகள் மற்றும் அதை ஒட்டிய உட்பகுதிகளை இணைக்கும் சுற்றுவழிச் சாலையை உருவாக்குதல்
   (ஆ) சாலை வசதிகள், உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பொதுப் பயன்பாட்டு வசதிகள் ஏதுமற்ற, ஒழுங்கற்ற வடிவங்களைக் கொண்ட நிலங்களை ஒருங்கிணைத்து, சீரான வடிவங்களைக் கொண்ட மனைகளாகப் பிரித்தல்.
   (இ) அனைத்து மனைகளுக்கும் முறையான சாலை வசதி ஏற்படுத்தி பூங்கா, விளையாட்டுத் திடல், திறந்த வெளிகள், பொதுப் பயன்பாட்டு இடங்கள் போன்றவற்றை வழங்குதல்.
   (ஈ) நில உரிமையாளர்களுக்கு குறைந்த பட்சம் 60 சதவிகித நிலம் மேம்படுத்தப்பட்ட, மதிப்பு கூட்டப்பட்ட மனையாக திரும்ப அளித்தல்.

3. திருமழிசை நிலச் சேகரிப்பு அபிவிருத்தித் திட்டத்தில் இடம்பெற்றுள்ள ஆவணங்கள் மற்றும் உத்தேச புல எண்களைக் குறிக்கும் வரைபடம் ஆகியவை எண்.1, காந்தி இர்வின் சாலை, எழும்பூர், சென்னை – 600 008-ல் அமைந்துள்ள தாளமுத்து-நடராசன் மாளிகை, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் முதல் தளம், கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள தகவல் மற்றும் ஆலோசனை மையத்தில் அலுவலக நேரத்தில் (பிற்பகல் 3.00 மணி முதல் மாலை 5.00 வரை) நில உரிமையாளர்கள் மற்றும் பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டு உள்ளது. மேலும் இத்தகவல் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் வலைதளத்தில் (www.cmdachennai.gov.in) பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

# அட்டவணை

| கிராமம் | உள்ளாட்சி அமைப்பு | மாவட்டம் | வட்டம் |
|---|---|---|---|
| குத்தம்பாக்கம் கிராமம் | பூந்தமல்லி ஊராட்சி ஒன்றியம் | திருவள்ளூர் | பூந்தமல்லி |
| **வ.எண்.** | **நில அளவை எண்.** | **உட்பிரிவு எண்.** | **பரப்பளவு (ஏக்கரில்)** |
| (1) | (2) | (3) | (4) |
| 1 | 501, 507, 508, 509, 510, 511, 512, 513, 514, 515, 516, 518, 519, 520, 521, 522, 523, 524, 525, 526, 527, 528, 538, 539, 540, 541, 577, 578, 579, 580, 792, 795, 796, 797, 798, 799, 800, 801, 802, மற்றும் 820 | --- | 336.91 |
| | | | |
| பழஞ்சூர் கிராமம் | பூந்தமல்லி ஊராட்சி ஒன்றியம் | திருவள்ளூர் | பூந்தமல்லி |
| 2 | 365 | | 36.25 |
| | | **மொத்த பரப்பளவு** | **373.17ஏக்கர்** |

இடம் : சென்னை
நாள் : 03.12.2024

ஒ.ம்./- 03.12.2024
உறுப்பினர் - செயலர்,
சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்,
சென்னை - 600 008.




**Thirumazhisai LPAD Scheme 7**